**ARTICLE 53 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00063**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 1–4
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# நாட்டுப்புற பழமொழிகளில் வாழ்வியல் விழுமியங்கள்

**முனைவர்.அசோக்குமார் ப**[1,*]
[1]கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி - 626124. விருதுநகர் மாவட்டம்., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.அசோக்குமார் ப — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
மக்களின் அன்றாட வாழ்வியலுக்கிடையே நிகழும் நிகழ்வுகளில் அரிதாகவும், புதிதாகவும், வியப்பாகவும், நிகழ்ச்சிகளைக் காண நேரிடுகையில், அந்நிகழ்ச்சியைப் பற்றி கூறுகையில் பழமொழி தோற்றம் பெறுகிறது. மேலும் வாழ்க்கையில் அனுபவப் பாடங்களாகப் பெற்ற கருத்துக்களும் பழமொழிகளாக உருவாக்கப்படுகின்றன. அவ்வகையில் நாட்டுப்புறவியலில் பழமொழிகளோடு தொடர்புள்ள வாழ்வியல் விழுமியங்கள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** நாட்டுப்புற நிகழ்வுகள்; பழமொழிகள்; வாழ்வியல் விழுமியங்கள்; வாழ்வியல் நிகழ்வுகள்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ப, மு. (2026). நாட்டுப்புற பழமொழிகளில் வாழ்வியல் விழுமியங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

கல்வியறிவு இல்லாத ஏழை எளிய பாமர மக்களின் வாழ்வியல் அனுபவங்களை வாய்மொழிப் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்துகின்றன. அவர்களின் உணர்ச்சிகளை எடுத்துக் கூறும் வாயில்களாக பழமொழி குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். ஒவ்வொரு பழமொழியும் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல கருத்துகளை எடுத்துரைக்கின்றன. எனவே பழமொழிகள் மூலம் அறியலாகும் நாட்டுப்புற வாழ்வியல் விழுமியங்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## பழமொழி அறிமுகம்

முதுமையை அழகாக வெளிப்படுத்துவது பழமொழியின் சிறப்பாகும். அப்பழமொழிகள் அறிவின் வளர்ச்சி நிலையில் பிறந்தவை. சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய சிறப்புக்களால், நாள்தோறும் இறந்து கொண்டு இருக்கும் இவ்வுலகில் என்றும் இறவாமல் வாழ்கின்றது என்பார் அரிஸ்டாட்டில். தமிழ்ப் பழமொழிகளின் சிறப்பை உணர்ந்த முன்றுரையரையனார் நான்நூறு பழமொழிகளைத் தொகுத்து பழமொழி நானூறு என்ற நூலினை படைத்தருளினார். இலக்கண நூலான தொல்காப்பியத்தில் பழமொழியின் சிறப்பினை செய்யுளியலில் குறிப்பிட்டுள்ளது. அதில் பழமொழி முதுமொழி என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது. இதனை,

> “நுண்மையும் சுருக்கமும் இலிவடைமையும்
> மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்

குறித்த பொருளை முடித்தற்கு வமூவம்
ஏதுநுதவிய முதுமொழி என்ப”

என்று நூற்பா விளக்குகிறது.

## விழுமியங்கள்

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகிறது. விழுமியம் என்ற சொல்லுக்கு 'மதிப்பு' என்பதே இணையான சொல். அச்சொல் பொருளாதாரத்திற்கு பயன்படும் சொல்லாக அமைகின்றது. எனவே இலக்கியத்தில் அதற்கு இணையாக 'விழுமியம்' எனும் சொல் பயன்பாடு வருகின்றது. விழுமிய என்ற சொல்லுக்கு சிறந்த, உசித, மேன்மையான, அரிய, சிரிய என்ற பொருளை கழகத்தமிழ் அகராதி குறிக்கின்றது. தொல்காப்பியம் இதனை,

“இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோல்என மொழிப தொன்மொழிப் புலவர்”

என்ற அடிகளில் விழுமியம் நுவலினும் என்பதற்கு அறம், பொருள், இன்பம், வீடு என்பன பொருளாக இருக்க வேண்டும் என்று தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகின்றது.

## குலம்

பிறந்த குலத்தின் பெருமையைக் காப்பாற்றுவது அக்குலத்தில் பிறந்தவர்களின் கடமையாகும். அவ்வாறு நிகழாமல் இயல்பு நிலையில் இருந்து மாறுபடும் போது தமக்கும் தாம் பிறந்த குலத்திற்கம் இழிவைத் தேடித் தருகின்றனர். உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கு உயர்வான பண்புகள் இயல்பாகவே அமையும் என்பதை,

"குலவிச்சை கல்லாமல் பாகம்படும்" என்று பழமொழி நானூறு கூறுகிறது.
இதனையே,

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்று முதுரை விளக்குகின்றது. தன்நிலை மாறினாலும் செல்வநிலை தாழ்ந்தாலும் மேன்மக்கள் ஒரு போதும் கீழ்த்தரமான செயலைச் செய்ய மாட்டார்கள் என்பதே பழமொழி விளக்குகின்றன.

## திருமணம்

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் திருமணம் என்பது குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சியாக உள்ளது. இல்லறம் இனிதே விளங்க நல்ல குணமுடைய துணைவி வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் வாழ்க்கையில் எதுவும் நிகழாதது போல் ஆகிவிடும். இதனை வள்ளுவர்,

“இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை” என்று கூறுகிறார். எனவே வாழ்க்கைத் துணையைத் தேடுவதில் கவனமுடன் செயல்பட வேண்டும் என்பதை "தண்ணீர்த்துறையில் தாயைப் பார்த்தால் பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டாம்" என்ற பழமொழி எடுத்துரைக்கின்றன.

## உழைப்பு

வாழ்வில் ஒருவன் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால் கடின உழைப்பு, விடா முயற்சி ஆகிய இரண்டும் அவசியமாகும். உழைப்பானது

உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் உறுதி தரக்கூடியது. தன்னம்பிக்கையுடன் மனிதன் செயல்படுவதற்கு உழைப்பே காரணமாக அமைகிறது.

எந்தவொரு செயலுக்கும் பிறரை நம்பாமல் தாமே முயற்சி செய்ய வேண்டும் என்பதைத், "தன் கையே தனக்கு உதவி" என்ற

பழமொழி சுட்டிக்காட்டுகின்றன. மேலும் முயன்று சேர்த்த பொருளைச் சிக்கனமாகச் செலவழிப்பது சிறப்பான செயலாகும் என்பதை,

"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" எனும் பழமொழி குறிக்கின்றன.

## கல்வி

கல்விச் செல்வமானது ஒருவன் பெறக்கூடிய செல்வங்கள் அனைத்திலும் சிறப்புடையது. என்னும் யாராலும் அழிக்க முடியாத, குறைக்க முடியாத செல்வமாகும். கொடுக்கக் கொடுக்க வளரும் தன்மையுடையது. இத்தகைய கல்வியானது உரிய காலத்தில் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை,

"இளமையில் கல்" எனவும், மேலும் கல்வியின் சிறப்பினை அளவிட முடியாது என்பதனை,
"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற பழமொழியும் இயம்புகின்றன.

## பொருள்

ஒருவன் சமூகத்தில் நல்ல மதிப்புடையவனாகத் திகழ்வதற்குப் பொருளே அடிப்படைக் காரணமாக உள்ளது. இதனை வள்ளுவர்,

“பொருளல்ல வரையும் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்” என்கிறார்.
பணமிருந்தால் சமூகத்தில் எதையும் சாதிக்கலாம் என்கிற நிலையில் பணத்தின் வலிமையை விளக்கும் விதமாகக் கீழ்க்கண்ட பழமொழிகள் விளக்குகின்றன:
“பணம் பத்தும் செய்யும்”
“பணம் இல்லாதவன் பிணம்”
“பணம் பந்தியிலே குணம் குப்பையிலே”

என்ற பழமொழிகள் பணத்தின் வலிமையையும், பணம் இல்லாமல் இருந்தால் சமூகத்தில் இருக்கும் மரியாதை ஒருவனுக்குக் கிடைக்கும் என்ற கருத்து இடம்பெறுகின்றன.

## முடிவுரை

ஏடுகளில் இடம்பெற்றிருக்காத இலக்கியமாக, எழுத்தறிவும் படிப்பறிவும் இல்லா பாமர மக்களால் எடுத்துரைக்கப்பட்ட பழமொழிகள் அவர்களின் அன்றாட வாழ்வில் நிகழ்ந்த அனுபவங்களே எனலாம். வாழ்க்கை நிலையினை படம்பிடித்துக் காட்டுவதோடு அனுபவ அறிவை வளர்த்துக்கொண்ட கருத்துக்களையும் இக்கட்டுரையில் காணமுடிகின்றன.

## துணைநூற் பட்டியல் (References)

1. சுபா~் சந்திரபோஸ்.ச.முனைவர் (உ.ஆ), - தமிழ்க் களஞ்சியம் - 3, இயல் பதிப்பகம், 23ஃபிஃ2739, தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவூர் - 613001, ஏழாம் பதிப்பு - 2023.

2. சாலமன் பாப்பையர். பேரா., தொல்காப்பியம் - பொருளதிகாரம், திருவள்ளுவரின் திருக்குறள், ஜெயா பதிப்பகம், 1, விசுவாசபுரி 4-வது தெரு, ஞான ஒளிவுபுரம், மதுரை - 625 016, டிசம்பர் - 1999.

© 2026 முனைவர்.அசோக்குமார் ப. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..